CHIEF CONSERVATOR OF FORESTS
1 NOV 2021
CHENNAI-600 015

-5- 040208
SF/31598/2020

சுருக்கம்

வனம் - சமூக காடுகள் - 2019-2020ஆம் நிதியாண்டுகளில் சமூக வனத்தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மர மகசூல் கணிப்புப் பணிக்காக ரூ.7.95 இலட்சம் ஒதுக்கீடு செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 14) துறை**

அரசாணை (டி) எண்.153

நாள்: 25.10.2021
பிலவ - ஐப்பசி – 8,
திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்க.:

1. அரசாணை (டி) எண்.290, சுற்றுச்சூழல்–வனத்(வனம்.14) துறை, நாள் 01.11.2019.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.எஸ்.எப்1/31598/2020, நாள் 29.10.2020.

=======

**ஆணை :**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017–2018 மற்றும் 2018–2019ஆம் நிதியாண்டுகளில் சமூக வனத் தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மர மகசூல் கணிப்புக் பணிக்காக ரூ.8.99 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்தில், 2019–2020ஆம் ஆண்டில் சமூக வனத் தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மர மகசூல் கணிப்புப் பணிகள் மேற்கொண்டமைக்கு தேவையான ரூ.7.95 இலட்சம் தொகையை ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, 2019–2020ஆம் ஆண்டில் சமூக வனத் தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மர மகசூல் கணிப்புப் பணிக்கு தேவைப்படும்

ரூ.7,95,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் மட்டும்) தொகையினை அனுமதித்து மற்றும் இந்நேர்வில் கிடைக்கப்பெறும் வன வருவாய் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. மேலும் வன வருவாய் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட விபரம் அரசுக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"4406 - காடு வளர்ப்பு, வன விலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு - 01 - காடு வளர்ப்பு 102 - சமூக பண்ணைக்காடு வளர்ப்பு - மாநிலச் செலவினங்கள் - JM சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் - 416 பெரும் பணிகள் - 01 பெரும் பணிகள் (IFHRMS (த.தொ.கு. 4406-01-102-JM-41601 )). "

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் ரூ.7,95,000/- 2021-2022ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (கா.ப.பா(ம)மீவ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண். 38900/2021, நாள். 13.10.2021 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.586 (ஐநூற்று எண்பத்தாறு)-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹு
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை-15

தலைமை மாநில கணக்காயர், சென்னை-18

மாநில கணக்காயர், சென்னை–18

சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.

சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

(முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15 வழியாக)

<u>நகல்</u>

நிதித்(கா.ப.(ம).மீ/(வ.செ.பொது II / வ.வ.I ) துறை, சென்னை–9.

இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 25/10/21

Personal Assistant,
O/o. Principal Chief Conservator of Forests,
Panagal Maaligai, Saidapet,
Chennai - 600 015.

27/11/21